பிரம்ம வித்யா

தொகுதி 3 மலர் 3

மே 1932

SL

[illegible]

188792

158
188792
APR 1932

உ

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"



| தொகுதி III | 1932௵ மார்ச்சு௴<br>பிரஜோத்பத்தி௵ பங்குனி௴ | பகுதி III |
|---|---|---|



## ஹாஸ்ய விநோதங்கள்.

**தம்பு** :—சாம்பு! நான் ஒன்றை இரண்டாக்குவேன். இரண்டை ஒன்றாக்குவேன். எல்லாம் புதிய வித்தைகள்.

**சாம்பு**:—(ஆச்சரியத்துடனும் ஆசையுடனும்) அப்படியானால் உனக்குக் காலணா தருகிறேன். என் வேஷ்டியை இரண்டு வேஷ்டியாய்ச் செய்.

**தம்பு** :—(இரண்டாய்க் கிழித்து) பார்த்தாயா வித்தை? எடு காலணா.

**சாம்பு** :—(திடுக்கிட்டு) தம்பு! போதும். இரண்டையும் ஒன்றாக்கு. அரையணா தருகிறேன்.

**தம்பு** :—(இரண்டையும் முடிந்து) இந்தா. இரண்டையும் ஒன்றாக்கி விட்டேன் எடு அரையணா.

* * * * *

**எஜமான்** :—டேய்! முத்துசாமி! சீக்கிரம் சென்று பக்கத்து போஸ்டாபீஸிலிருந்து ஒரு அணா தலை ஒன்று கொண்டுவா.

**முத்துசாமி** :—இதோ வந்திட்டேன் சாமி.

[ஆணையுடன் போஸ்டாபீஸ் செல்லுகிறான்.]

**முத்துசாமி** :—(கிளார்க்கை நோக்கி) என் சாமி! இங்குட்டு ஒரு தலை எங்கே கிடைக்கும்?

**கிளார்க்** :—(தலையை நீட்டும் ஸ்டாம்ப்வெண்டரைக் காட்டி) அதோ அவனிடம் சென்று வாங்கிக்கொள்.

**முத்துசாமி**:—(ஜன்னலின் வழியாய் கையை நீட்டி ஸ்டாம்ப்வெண்டரின் தலையைப்பற்றி) சாமி! விடுங்க தலையை. கையிலே ஒரணா காசு இருக்குது. இந்தாலே கொடுக்கிறேன்

* * * *

**வண்டிக்காரன்**:—சாமி! எங்கே? ரயிலுக்கா? சும்மா குந்துங்க நம்ம வண்டிலே.

**வழிப்போக்கன்** :—அப்பா! நீ மஹாராஜனுயிருக்கவேண்டும். ஸமயத்தில் வந்துசேர்ந்தாயே.

[வண்டியிலுட்காரவும் ஸ்டேஷன் வருகிறது.]

**வண்டிக்காரன்** :—சாமி! எடுங்க சில்லரை.

**வழிப்போக்கன்** :—(திடுக்கிட்டு) நல்ல வேலை செய்தாய். சில்லரையைப்பற்றி என்னிடம் ஏதாவது பேசினுயா? சும்மா வண்டியில் உட்காரச் சொன்னாய். சத்தமன்னியில் உட்கார்ந்து வந்தேன். ஒரு தம்படிகூட கொடுக்கமுடியாது.

* * * *

**சீமாச்சு**:—டேய்! சீச்சு! க்ஷவரம் செய்துகொள்ளாமலே முகத்தில் ரோமங்களின்றி வழுவழுப்பாயிருக்க என்ன செய்யலாம்?

**சீச்சு** :—அதெற்கென்ன? நிறைய ரோமசம்ஹாரி பௌடரை பூசிக்கொண்டு துடைத்துவிட்டால் போதும்.

**சீமாச்சு** :—அப்படியானல் அதை பூசிக்கொள்ளுகிறேன்.

(சிறிது நேரத்தில் முகத்தைக் கழுவி)

சீச்சு! இப்பொழுது வழவழப்பாய் கோழிமுட்டைபோலிருக்கிறதா?

**சீச்சு** :—சந்தேகமென்ன? கண்ணாடியில் பார். புருவமயிர்கள்கூட இல்லாமல் கோழிமுட்டைபோலவே இருக்கிறது.

* * * * *



**அரங்க** :—எங்கள் விஷயத்தில் உனக்கென்ன அவ்வளவு சிரத்தை?

**திருவே** :—பாலகிருஷ்ணன் இதில் சிக்கிக்கொண்டிருப்பதால்தான். மேலும் இதன் உண்மையைக் கண்டறிய எனக்கு அவா ஏற்பட்டிருக்கிறது.

**அரங்க** :—எதன் உண்மையை?

**திருவே** :—பத்மநாபன் யார், அவனைப்பற்றிய விஷயங்கள் என்ன என்னும் உண்மையை.

**அரங்க** :—இதைக் கண்டுபிடிக்க உன்னாலும் ஆகாது. மற்றெவராலும் ஆகாது.

**திருவே**:—இருந்தாலும் என்னாலானவரையில் பார்க்கிறேன்.

**அரங்க** :—குசாலாய்ச் செய். உன்னைத் தடுக்க எனக்கு இஷ்டமில்லை. ஆனால் இதுவிஷயத்தில் உனக்குப் புத்தி சொல்லலாமென்று சொன்னேன்.

**திருவே** :—மிகவும் சந்தோஷம். ஆனால் உன்னுடைய புத்திமதி எனக்கு வேண்டியதில்லை.

**அரங்க** :—சரி. பாலகிருஷ்ணன் உனது தோழன்தானே?

**திருவே** :—இது என்ன கேள்வி. கேட்காமலே உனக்குத் தெரியுமே.

**அரங்க** :—ஆகையால்தான் அவனுக்கு ஆபத்தைத் தேடுகிறாயோ? நீ அப்படி நடந்துகொண்டால் பாலகிருஷ்ணனுக்கு அபாயம் ஏற்படுவது நிச்சயம்.

**திருவே** :—என்னைப் பயமுறுத்தவா பார்க்கிறாய்? அப்படி நான் நடக்காதபக்ஷத்தில் பத்மநாபனை ஒழித்ததுபோல் அவனையும் ஒழிக்கவா பார்க்கிறாய்?

**அரங்க** :—நான் கொலைகாரன் என்று நீங்கள் தப்பு அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள். உண்மை தெரிந்தால் அப்படி நினைக்கமாட்டீர்கள்.

**திருவே** :—சரி. இவ்வளவுதானே? நாழிகையாகிவிட்டது. கதவைத் திற.

அரங்க :—அவசரப்படாதே. இன்னம் ஒரு சங்கதி. உன் காதல் விஷயம் எனக்குத் தெரியும். உன் காதலியையும் எனக்குத் தெரியும். அவள் ஓர் பிரபுவின் ஏக புத்திரி. மிக்க ரூபலாவண்யமுள்ளவள். சிறு பெண். அவளுடைய க்ஷேமத்திற்காகவும், பாலகிருஷ்ணன் க்ஷேமத்திற்காகவும், உன்னுடைய க்ஷேமத்திற்காகவும் நீ இதில் தலையிட்டுக்கொள்ளக்கூடாது. (என்று நிதானமாயும் கண்டிப்பாகவும் சொன்னான்.)

திருவே :—அவளுக்கு நீயாவது உன் தோழர்களாவது என்ன கெடுதல் செய்வீர்கள்?

அரங்க :—அதைப்பற்றி இப்பொழுது பேசவேண்டிய அவசியமில்லை. நான் சொல்லவேண்டியதைச் சொல்லி உனக்கு எச்சரிக்கையும் செய்துவிட்டேன். பிறகு உன்னுடைய இஷ்டப்படி நடக்கலாம். (என்று சொல்லிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான்.)

## அத்தியாயம் 11.

மறுநாள் பகல் சுமார் பத்துமணிக்கு ஆனந்த நிலயத்தின் ஓர் அழகிய அறையில் நமது தியாகராஜன் ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு தனக்குள் சொல்லிக்கொண்டான்:— "நல்ல போலிப் பத்மநாபன். நமது எண்ணப்படியே எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்று வருகின்றன. இன்னும் கொஞ்சநாளையில் தனக்கு வரப்போகும் ஆபத்தையறியாத சுத்த மடையன். எவன் எப்படிப் போனால் என்ன? நமது காரியம் முடிவடைய வேண்டியதுதானே. பார்ப்போம்."

தியாகராஜன் ஆனந்த நிலயத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து சுமார் ஒருவருஷகாலமிருக்கலாம். வந்ததும் புஸ்தகசாலையிலுள்ள புஸ்தகங்களை ஒழுங்காகத் தாவாரியாய்ப் பிரித்து வரிசையாகப் பீரோக்களில் வைத்தான். பிரபுவிற்கு எந்த விஷயத்தில் பிரியமதிகமென்று தெரிந்துகொண்டு அவர் திருப்தியடையும்வண்ணம் பேசுவான். அவன் சூதும் வாதும் நிறம்பியவன். எப்பொழுதும் பகல் போஜனமானதும் பிரபுவிற்குப் பத்திரிகைகள் வாசிப்பதும் உலக விவகாரங்களைச் சொல்வதுமாக சாயங்காலம் வரையிலுமிருப்பான். பிறகு மாலை ஆறுமணிமுதல் இரவு போஜனம் வரையில் இருக்கவேண்டும். ஆனதுபற்றியே பிரபு அவனைத் தனது மாளிகையிலேயே அவன் வசிப்பதற்கு ஒரு அறை கொடுத்து சாப்பாடு முதலானதுகளைத் தன் மாளிகையிலேயே வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்திருந்தார். அவ்வறையிலுள்ள கடிகாரம் மணி பதினொன்று அடிக்கத் தியாகராஜன் தனது அறையைப் பூட்டிக்கொண்டு பிரபு வழக்கமாயிருக்கும் புஸ்தகசாலைக்குள் வந்தான். அப்பொழுது காமாக்ஷியம்மாள் தன் பிதாவுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். தியாகராஜனைக் கண்டதும் அவனை வெறுப்புடன் பார்த்து "ஐயா! தங்கள் வரவை பிரபு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் நேற்று இராத்தான் வந்தீர்களோ?" என்று சாந்தமாயக் கேட்டாள்.



தியாக :—ஆம். பட்டணத்துப் பெரிய புஸ்தகசாலையில் சில புஸ்தகங்களைப் பார்க்கவேண்டியிருந்தது. மேலும் நகரச் சபா மண்டபத்தில் நேற்று சாயங்காலம் பண்டிதர் சொக்கநாதரால் 'மோக்ஷம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் உபந்நியாசம் நடந்தது. அது மிகவும் நன்றாயிருந்தது. பிரபு அதைக் கேட்டிருப்பாரேயாகில் மிகவும் சந்தோஷப்படுவார். (என்று சொல்லி அவளை ஒருவிதமாய்ப் பார்த்தான்.)

பிரபுவிற்குமட்டும் பார்வை ஸரியாக இருந்தால் அவ்விருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டதிலிருந்து அவர்கள் ஸ்நேகபாவத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டிருப்பார்.

ஒன்றுமறியாத பிரபு, தியாகராஜன் சொன்னதைக் கேட்டு "ஓகோ! அப்படியா? பண்டிதரை எனக்கு நன்

ருய்த் தெரியும். மிகவும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பார். அம்மா காமாக்ஷி! தியாகராஜன் வந்துவிட்டான். பிரசங்கத்தைப்பற்றி அவனைக் கேட்கவேண்டும். நீயும் எங்கேயோ போகவேண்டுமென்று சொன்னாயே. அப்படியே போய் சீக்கிரம் வந்துவிடு." என்று சொன்னார்.

உடனே காமாக்ஷி, பிதாவினிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு வெளியே போகையில், கதவை மூடவந்த தியாகராஜனைப் பார்த்து "இனி இங்கு வருவதில்லை என்று சொன்ன நீ என்ன தைரியத்தோடு இங்கே மறுபடியும் வந்தாய்?" என்று கடுகடுப்பாய்க் கேட்டாள்.

**தியாக:**—ஓர் காரியமாய்த்தான் வந்தேன்.

காமாக்ஷி அவ் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு தன் அறைக்கு வந்து, தனது தோழி விஜயாளிடம் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து, மாளிகையையடுத்த தோப்புக்குள் உலாவச் சென்றாள். அங்கு ஓர் ஆலமரத்தின்கீழ் போடப்பட்டிருந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு யோஜிக்கலானாள்.—

"அப் பாபி தியாகராஜன் கையில் அகப்பட்டுக்கொண்டு எத்தனை நாட்கள் கஷ்டப்படுவது? அவனை மீறி ஒரு காரியத்தையும் செய்ய சக்தியற்றவளாய் இச் சமயம் இருக்கும்படியாய்விட்டதே. இவ் விஷயத்தை என் தகப்பனாரிடம் சொல்லவும் முடியவில்லையே. என் காதலனிடமும் சொல்ல முடியவில்லையே. நான் என்ன செய்வேன்? என் காதலன் என் கண் முன்னால் இறக்க நேரிடுமென்று தெரிந்தும் நான் ஒன்றும் செய்யமுடியாதவளாய் இருக்கும்படியாய்விட்டதே. ஈசா! நீதான் அவரைக் காப்பாற்றவேண்டும். அத்துரோகியின் எண்ணம்மட்டும தெரிந்துவிட்டால் அவர்களை எதிர்த்து நிற்கலாமே. அவன் எண்ணம் கெட்டது என்பதுமட்டும் தெரிகிறது. பத்மநாபனையும் காப்பாற்ற வழி இல்லையே. திருவேங்கடம் உண்மையைத் தெரிந்துகொள்வானாகில் என்னைப்பற்றிஎன்ன நினைப்பானோ? நானும் என் நடத்தையைப்பற்றி எப்படிச் சொல்லுவேன்? நான்



அதை ஏன் துணிந்து வெளியிடக்கூடாது? ஐயோ! அப்படி வெளியிடுவேனாகில் நான்மட்டுமல்ல; எனது காதலன் திருவேங்கடமும் பாலகிருஷ்ணனும் இறக்கவேண்டியது நிச்சயம். ஆகையால் நான் ஒன்றும் பேசாமலிருந்தே விஷயங்கள் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டுதானிருக்க வேண்டும்." என்று சொல்லிக்கொண்டே தன் ஆசனத்தை விட்டெழுந்திருந்து அத் தோப்பின் வேலியோரமாய் உலாவிக்கொண்டிருந்தாள். அப்படி உலாவிக்கொண்டிருக்கையில் வேலியின் மறுபக்கத்திலிருந்து "அம்மணீ! ஸௌக்கியந்தானா?" என்னும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு சத்தம் வந்த இடத்தைப் பார்த்தாள். பாலகிருஷ்ணன் கவலைகொண்டமுகத்தோடு நிற்பதைக்கண்டு "ஸௌக்கியந்தான். ஏது இவ்வளவுதூரம் வந்தது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

**பாலகி:**—அம்மா! உம்மைக்கண்டு பேசவேதான் வந்தேன். அவ் விஷயம் மிகவும் ரகஸ்யமானது. அதுவும் நம்மைப்பற்றியதே. ஒருவினாடிகூடத் தாமதிக்கக்கூடாது. உடனே ஸுந்தர விலாஸம் நான் போய்ச் சேரவேண்டும். உங்களை நல்ல வேளையாய் இங்கு கண்டேன். உமது மாளிகைக்கு வரப் பயமாயிருக்கிறது. ஆனாலும் உம்மைக் கண்டு பேசவேண்டியதவசியமாய் இருப்பதால் துணிந்து இங்கு வந்தேன்.

தன் மாளிகை என்று பாலகிருஷ்ணன் சொன்னதும் காமாக்ஷி ஆச்சரியத்தாலும் பயத்தாலும் நடுங்கிப்போய் பாலகிருஷ்ணனைப் பார்த்தாள்.

**பாலகி:**—நான் உண்மையைச் சொன்னால் ஆச்சரியப்படமாட்டீர்கள். என்னை பாலகிருஷ்ணன் என்று நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர். நானும் தற்செயலாய் நீங்கள் கல்யாணசுந்தரம் பிரபுவின் ஏகபுத்திரியாகிய காமாக்ஷிப் பெருமாட்டி என்பதைத் தெரிந்துகொண்டேன். இனி உம்மை ஏன் குமுதமென்றழைக்க வேண்டும்?

காமாக்ஷி :—குமுதமென்றழைப்பதே மேல். அதுவே நமக்கு க்ஷேமம்

பாலகி :—அப்படியே. நான் ஸுந்தர விலாஸத்திலிருந்து, என் ஆபத்தையும் கவனியாமல், முக்கியமான சமாசாரமொன்றைத் தங்களிடம் சொல்லவே வந்தேன். உமது காதலன்—எனது உயிர்த்தோழன்—திருவேங்கடம் காப்பாற்றப்படவேண்டும். இது விஷயமாய் உம்முடன் ஆலோசிக்கவேண்டும்.

காமாக்ஷி :—என்ன? திருவேங்கடத்திற்கா ஆபத்து? காப்பாற்றவாவேண்டும்? நீர் சொல்வது விளங்கவில்லையே. (என்று மிகுந்த பரபரப்பாய்க் கேட்டாள்.)

பாலகி :—ஆம். அவன் உயிருக்கே ஆபத்து. எனக்கொன்றும் புரியவில்லை. நாங்கள் இருவரும் பவழக்காரத் தெருவில் அரங்கநாதன் வீட்டை இரவு கவனித்துக்கொண்டிருந்தபொழுது அவன் திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டான். அப்புறம் மூன்று நாட்களாய் அந் நால்வரில் ஒருவனாகிய வீரபத்திரனைப் பின் தொடர்ந்து ஊரூராய் அலைந்து திரிந்து இன்று காலையில் என்னிடம் வந்து விஷயங்களை விபரமாய்ச் சொன்னான். மேலும் நேற்றிரவு இங்கிருந்து அவன் தனது இருப்பிடம் சென்றபொழுது அரங்கநாதனால் ஏமாற்றப்பட்ட விஷயத்தையும் சொன்னான் (என்று நடந்தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொன்னான்.)

காமாக்ஷி :—எவ்விதமான ஆபத்து? அது விஷயம் உமக்கு எவ்வளவு தெரியும்?

பாலகி :—எனக்கு ஜாஸ்தியாய் ஒன்றும் தெரியாது. ஆனால் தற்செயலாய் கொஞ்சம் தெரிந்துகொண்டேன். நானும் இவ்வளவு நாளாய் அவர்களின் மர்மம் ஏதாவது புலப்படுமோவென்று பிரயத்தனம் செய்துகொண்டிருந்தேன்.

காமாக்ஷி :—நீங்கள் அதைக் கண்டுகொள்ளும்படி நடக்கமாட்டார்கள். அவர்கள் மிக்க ஜாக்கிரதையுள்ளவர்கள். திருவேங்கடத்தின் ஆபத்து என்ன?



பாலகி :—முதலில் உம்மைத் தெரிந்துகொண்டவிதத்தைச் சொல்லுகிறேன். சில மாதங்களுக்குமுன் திருவேங்கடம் உமமுடைய படத்தைக் காட்டி, நீங்கள் கல்யாணசுந்தரம் பிரபுவின் ஏகபுத்திரியாகிய காமாக்ஷிப் பெருமாட்டியென்றும், தன்னுடைய பிரியக் காதலியென்றும், உங்கள் காதல் வெகு ரகஸ்யமாய் இருக்கவேண்டுமென்றும் சொன்னான். நான் ஸ்ரீநகரத்திலிருந்து வாங்கிய பதக்கத்தைத் தங்களுக்கு என் ஞாபகமாய் இருக்கும்பொருட்டு அளித்திருப்பதாயும் சொன்னான். அன்று நீங்கள் சுந்தரவிலாசத்தில் முதல் முதல் என்னைப் பார்க்கவந்தபொழுதே அப் பதக்கத்தால் நீங்கள் யார் என்பதைத் தெரிந்துகொண்டு தெரியாதவன்போலபிநயித்தேன். நான் எப்படித் திருவேங்கடத்தின் ஆப்த நண்பனோ அதேவிதமாய் என்னைத் தாங்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இதைக் கேட்ட காமாக்ஷி முகம் வெளுக்கக் கைகால்கள் நடுநடுங்கப் பாலகிருஷ்ணனைப் பார்த்து "உம்மை எச்சரித்தவள் நான் என்பதை அவரிடம் சொல்லிவிட்டீர்களோ?" என்று பயத்துடன் கேட்டாள்.

பாலகி :—அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அப் பெண்ணின் பெயர் குமுதமென்றுமட்டும் சொன்னேன். உம்மை அவன் தெரிந்துகொள்ளும்படியான விஷயம் ஒன்றுமே சொல்லவில்லை. பயப்படவேண்டாம்.

காமாக்ஷி :—இப் பரம துஷ்டர்களின் சாகவாசம் எனக்கிருப்பதாய் அவருக்குத் தெரியாதே?

பாலகி :—தெரியவே தெரியாது. அதைப்பற்றிக் கவலை வேண்டாம்.

காமாக்ஷி:—நீர் எனக்கு உண்மையான சிநேகிதராய் இருந்தால் இது விஷயத்தைத் திருவேங்கடத்தினிடம் ஒரு வார்த்தைகூட சொல்லக்கூடாது.

பாலகி :—ஒருநாளும் சொல்லமாட்டேன். நீங்கள் இருவரும் எனது சிநேகிதர்கள். எனக்கு அவனிடமுள்ள

அன்பினால் எனக்கு நேரிடும் ஆபத்தையும் கவனியாமல் உம்மிடம் சமாசாரம் சொல்லவே வந்தேன். பத்மநாபன் யார் என்பதுமட்டும் எனக்குத் தெரியவேயில்லை.

காமாக்ஷி :—பத்மநாபன் மிகவும் நல்லவன், யோக்கியன், மேலான குணமுடையவன். பாபிகள், அயோக்கியர்கள், கொலைபாதகர்கள் அவருக்குத் தீங்கு செய்துவிட்டார்கள். நீங்கள் அரங்கநாதன் வீட்டில் கண்டது பத்மநாபரின் பிரேதம்தானே?

பாலகி :—அதற்கென்ன சந்தேகம்? என்னைப்போல் வேஷம் போடப்பட்டிருந்ததின் காரணம்மட்டும் தெரியவில்லை. ஒருக்கால் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

காமாக்ஷி :—இது விஷயமாய் உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் எனக்கும் தெரியும்.

பாலகி :—பத்மநாபனை நீங்கள் அடிக்கடி சந்தித்ததுண்டு போல் தெரியவந்தது. அது வாஸ்தவமோ?

காமாக்ஷி :—ஆமாம். சந்திப்பதுண்டு. இதை யார் உம்மிடம் சொன்னது?

பாலகி :—நான் கண்டுபிடித்திருப்பதாய்ச் சொன்னதில் இதுவும் ஒன்று. அவருக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தைப்பற்றி அவருக்குச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அதை அவர் கவனிக்கவில்லை.

காமாக்ஷி :—சரி. அதற்குமேல்?

பாலகி :—அவரும் நீங்களும் உண்மையான நண்பர்கள் தானே?

காமாக்ஷி :—என்னை ஏன் இவ்விதம் கேட்கவேண்டும்?

பாலகி :—அப்படி நினைக்கக் கூடாது. திருவேங்கடத்தைக் காப்பாற்றவே இவ்விதமான தகவல்களைக் கண்டறிய வேண்டியதாயிருக்கிறது.



காமாக்ஷி :—அவருக்கு ஆபத்து நேரிடப்போவது உமக்கெப்படித் தெரியும்?

பாலகி :—நான் அரங்கநாதனைக் கவனித்துவருகிறேன். அவன் திருவேங்கடத்தை ஒழிக்க ஏற்பாடு செய்வதாய்த் தெரிகிறது. இது உமக்கும் தெரியுமே.

காமாக்ஷி :—ஆமாம். எனக்கும் தெரியும். என் கௌரவம் போனபோதிலும் என் உயிர் போனபோதிலும் அவரைக் காப்பாற்றியே தீருவேன்.

பாலகி :—உம்மைப்போலவே நானும் காப்பாற்றப் பின்வாங்கமாட்டேன். நாமிருவரும் சேர்ந்து அவர்களுடைய சூழ்ச்சிகளைத் தவிடுபொடியாய்ச் செய்துவிடவேண்டும். ஆகையால் பத்மநாபனைப்பற்றிய தகவல்களைச் சொல்லவேண்டும். இறந்தவன் ஏன் என்னைப் போல் வேஷம் போடப்பட்டிருந்தான்?

காமாக்ஷி :—அப் பிணம் பத்மநாபனென்று உமக்கு நிச்சயம் தெரியுமா?

பாலகி :—இது என்ன கேள்வி? நான் நிச்சயமாய்ச் சொல்வேன்.

காமாக்ஷி :—நீங்கள் சொல்லுவது வாஸ்தவம். நீங்கள் பிணத்தை அவ் வீட்டில் பார்த்திருக்கலாம். ஆனால் அது பத்மநாபனது என்பதுதான் எனக்குச் சந்தேகம்.

பாலகி :—உமக்குச் சந்தேகம் ஏற்படும்படியான காரணமென்ன?

காமாக்ஷி :—நேற்றைய தினம் கிடைத்த ஒரு தகவலிலிருந்து பத்மநாபன் உயிருடன் இருப்பதாகச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

பாலகி :—என்னைப்பற்றியதாய் ஏன் இருக்கக்கூடாது?

காமாக்ஷி :—உம்மைப்பற்றியதல்ல. உண்மையான பத்மநாபனைப்பற்றியே.

பாலகி:—அப்படியானால் அவர் எங்கே வசிக்கிறார்? அவரைக் காண நீங்கள் ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை?

காமாக்ஷி:—அவர் உயிருடன் இருக்கும்பக்ஷத்தில் அது அரங்கநாதன் ஒருவனுக்கே தெரியும். மற்றவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

பாலகி:—அப்படி அவர் உயிருடன் இருக்கும்பக்ஷத்தில் நான் ஏன் அவரைப்போல் நடிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

காமாக்ஷி:—அந் நால்வரின் சதியாலோசனைகள் பூர்த்தியாய் முடியும்பொருட்டுத்தான். அவ்வயோக்கியர்களின் குணம் உமக்குத் தெரியவே தெரியாது.

பாலகி:—அவர்கள் சாமான்யமானவர்களல்ல என்பதை நான் முன்பே கண்டுகொண்டேன். எனக்கு என்ன காரணத்தினால் ஆபத்து வரும்?

காமாக்ஷி:—ஒருக்கால் அவர்களின் ரகசியத்தை நீர் வெளியிட்டுவிடுவீர்களோவென்றும் அப்படி வெளியிட்டுவிட்டால் தங்கள் சூழ்ச்சிகள் எல்லாம் அடியோடு அழிந்துவிடும் என்றும் எண்ணியே பவழக்காரத்தெரு கொலையைப்போலவே உம்மையும் ரகசியமாய் ஒழித்துவிடப் பார்ப்பார்கள்.

பாலகி:—உமக்கு இவ்வளவு தெரிந்தும் ஏன் திருவேங்கடத்தை எச்சரிக்கக்கூடாது? அவனும் ஆபத்தில் சிக்கியிருக்கிறானே.

காமாக்ஷி:—அவரிடம் சொன்னால் பரிகாசம் செய்கிறார். அவருக்கு அவர்களுடைய சூழ்ச்சிகள் தெரியாது.

பாலகி:—அப்படியாயின் நாமிருவரும் அவனை ஏன் காப்பாற்றக்கூடாது? அவன் என் உயிரிலும் மேலானவன்.

காமாக்ஷி:—அது எனக்குத் தெரியும். மேலும் நீங்கள் அவருக்கு ஒருசமயம் செய்த ஒத்தாசையை அவர் உயிருள்ளவரையிலும் மறக்கமுடியாதென்று என்னிடம் சொல்லியிருக்கிறார்.



பாலகி:—அது அப்படியொன்றும் பிரமாதமானதல்ல. அதைப்பற்றி இப்பொழுதென்ன? அவனோ ஆபத்தில் இருக்கிறான். அரங்கநாதனும் விஷமம் செய்துகொண்டேயிருக்கிறான். நாம் இப்பொழுது என்ன செய்வது?

காமாக்ஷி:—நீங்கள் ஒப்பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பதால் உம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

பாலகி:—என் நண்பன் ஆபத்திலிருக்கும்போது நான் ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது. என்னைப் போலீஸில் சிறை வைத்தாலும் சரி, வேறு எவ்வித ஆபத்து வந்தாலும் சரி, அவனுக்கு ஒத்தாசை செய்யாமலிருக்கமாட்டேன். இது நிச்சயம்.

காமாக்ஷி:—உங்கள் நிலைமை மிகவும் கேவலமானது. உங்களை அன்றிரவு குழந்தையைவிட்டு ஏமாற்றி அழைத்துவருமுன் உம்முடைய லேவாதேவியை நன்றாய்த் தெரிந்துகொண்டே இவ்விதம் செய்தார்கள்.

பாலகி:—அது உங்களுக்குத் தெரியுமோ?

காமாக்ஷி:—அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை தற்செயலாய்க் கேட்டேன். அது உம்மை அழைத்துவர ஒருமாதத்திற்குமுன் நடந்த ஏற்பாடு. உமது ரகசியங்களையும் உமது நடக்கைகளையும் உமக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் அவர்கள் நன்றாய் அறிவார்கள். உம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்ததும் அவர்களே.

பாலகி:—என்னை அப்படிச் செய்தது அவர்களல்ல. ஒரு பெண்தான் அப்படிச் செய்தாள். அது நிச்சயமாய்த் தெரியும்.

காமாக்ஷி:—பத்மாக்ஷிதானே?

பாலகி:—அவளை உமக்குத் தெரியுமோ?

காமாக்ஷி:—நேரில் பார்த்தது கிடையாது. அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்துதான் தெரியும்.

188792



பாலகி :—ஒருக்கால் திருவேங்கடம் சொன்னானோ?

காமாக்ஷி :—அவருக்கு இது விஷயம் ஒன்றும் தெரியாது. மேலும் பத்மாக்ஷியைப்பற்றி என்னிடம் சொல்லவில்லை.

பாலகி :—ஆனால் இவ் விஷயம் உமக்கெப்படித் தெரியும் ?

காமாக்ஷி :—நீங்கள் பாலகிருஷ்ணன் என்பதை எப்படித் தெரிந்துகொண்டேனோ அவ்விதமாகவே அதுவும் தெரியும். மேலும் பத்மாக்ஷியும் அவர்களால் தூண்டப்பட்டே அப்படிச் செய்தாள்.

பாலகி : ஆகையால் நீங்களும் அவர்கள் உடந்தைதானோ?

காமாக்ஷி :—உடந்தையல்ல. என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் சில ரகசியங்களை வைத்திருப்பவள். உங்களைப் போல் அதை வெளியிடாமல் தடைப்படுத்தப்பட்டவள். தன் மானமும் கௌரவமும் அழியத்தக்க ஸ்திதியிலுள்ளவள்.

பாலகி :—அப்படியானால் இதிலிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள வழி இல்லையா ? நாங்கள் உமக்குச் சகாயம் செய்யக்கூடாதா ?

காமாக்ஷி :—அப்படி நீங்கள் ஒத்தாசை செய்வதாய் இருந்தால் சிறை வாசந்தான் அதற்குப் பலன், ஆகையால் அப்படிச் செய்து ஆபத்திற்குள்ளாக வேண்டாம்.

பாலகி :—நீங்கள் பெண்ணல்லவோ ? உங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டாமா ?

காமாக்ஷி :—நீங்கள் அப்படிச் செய்யக்கூடாதென்று மறுமுறை சொல்லுகிறேன். அப்படிச்செய்வது வீண் பைத்தியக்காரத்தனம்.

பாலகி :—உங்கள் காதலையாவது காப்பாற்ற முயற்சி செய்யலாமா ?



காமாக்ஷி :—உம்மால் என்ன செய்ய முடியும்? அரங்கநாதன் கைக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர். எந்த ஸமயத்தில் உமக்கு ஆபத்து வருமோ.

பாலகி :—அரங்கநாதனை எதிர்க்கிறேன். அவனுடன் போராடுகிறேன்.

காமாக்ஷி :—அவன் குணம் உமக்குத் தெரியாது. தன் காரியம் ஆகவேண்டியிருந்தால் கொலைக்கும் பின்வாங்கமாட்டான். அவன் தன் கையாலேயே உம்மைக் கொன்றுவிடுவான்.

பாலகி :—சரி. உமக்கு ஏதாவது சமாசாரம் தெரிவிக்கவேண்டியிருந்தால் உமது மாளிகை விலாசத்திற்குக் கடிதம் எழுதலாமோ ?

காமாக்ஷி :—எழுதலாம். ஆனால் நீர் எழுதும் கடிதத்தை ஓர் உறையில் போட்டு என் மேல்விலாசம் எழுதி அதை ஒட்டி மற்றொரு உறையில் போட்டு என் தோழி விஜயாவின் மேல்விலாசத்திற்கு அதை அனுப்பிவிடும். அது பத்திரமாய் வந்துசேரும். என் தோழியை முற்றிலும் நம்பலாம். மேலே என்ன செய்வதாய் உத்தேசம் ?

பாலகி :—ஸுந்தர விலாஸம் சென்று அரங்கநாதன் முதலியவர்களின் ரகசியத்தைக் கண்டறியப் போகிறேன்

காமாக்ஷி :—நீங்கள் அவன் விஷயத்தில் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். கொஞ்சம் தவறிவிட்டால் உமக்கு அபாயம் ஏற்படுவது நிச்சயம். நாழிகையாகிவிட்டது. போய்வாருங்கள். ஜாக்கிரதை.

பாலகி :—சரி. அப்படியே நடந்துகொள்ளுகிறேன். போய் வருகிறேன். (என்று சொல்லி ஒரு நொடிப்பொழுதில் மறைந்துவிட்டான்.)

---

## அத்தியாயம் 12.

மேலே சொல்லிய சம்பவங்கள் நடந்து இரண்டு நாட்கள் சென்ற பிறகு ஸுந்தர விலாஸத்தில் பாலகிருஷ்ணன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு யோஜனையில் ஆழ்ந்திருந்தான். அப்பொழுது சிறு ஒரு சீட்டைப் பாலகிருஷ்ணனிடம் கொடுத்து "ஐயா! ஒருவர் தங்களைப் பார்க்கவேண்டுமென்று வாசலில் நிற்கின்றார். மிகவும் அவசரமான காரியமாம்." என்றான்.

பாலகிருஷ்ணன் அச் சீட்டைப் பார்க்க 'சாந்தலிங்கம், சிங்கப்பூர்' என்று இருக்கக் கண்டு "சரி, உள்ளே அழைத்துவா." என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு "இவன் யாரோ? இப் பெயரை ஒருநாளும் கேட்டதில்லையே. இது அரங்கநாதன் வேலையாய் இருக்குமோ?" என்று எண்ணிக்கொண்டிருக்கையில் சாந்தலிங்கம் உள்ளேவந்து பாலகிருஷ்ணனுக்கு வந்தனமளித்தான். அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயது இருக்கலாம். ஒத்தநாடியாய் உயரமானவன். கண்கள் குழிவிழுந்துத் தாடைகள் ஒட்டி அவனது முகம் பார்வைக்கு விசனமுற்றிருப்பதாகவும் கவலையோடு கூடியதாகவும் காணப்பட்டது. ஆனால் அவன் மிக்க நாகரீகமான உடைகள் அணிந்துகொண்டும், விரல்களில் விலையேறப்பெற்ற நவரத்தின மோதிரங்கள் அணிந்துகொண்டும், கையில் தங்கப் பிடி போட்ட மலாகா பிரம்பொன்றை வைத்துக்கொண்டுமிருந்தான். பாலகிருஷ்ணனும் அவனுக்கு வந்தனமளித்தான்.

சாந்த: ஐயா! தங்களைக் கண்டு தங்களுடன் சிநேகம் வைத்துக்கொள்ளவேண்டுமென்று வெகுநாளாய் எனக்கு விருப்பம். அதுவும் நீங்கள் சிங்கப்பூரில் தங்கியிருந்ததுமுதல்தான் அவ்வித எண்ணம் உண்டாயிற்று. அதுமுதல் இதுவரையில் தங்களைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. நல்ல வேளையாய் தங்களைக் கண்டுகொண்டேன்.



இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் தான் ஒருநாளும் சிங்கப்பூருக்குப் போனதில்லை என்று சொல்ல வாயெடுத்ததும் சமாளித்துக்கொண்டு "உம்மைக் காண மிகவும் சந்தோஷம். இந்த ஆசனத்தில் உட்காருங்கள்." என்று சொன்னான்.

சாந்தலிங்கம் அவ்வாறே ஒருபக்கத்தில் தன் கைப் பிரம்பை வைத்துவிட்டு ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

சாந்த:—உங்களைக் காணவேண்டியே வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறேன். இரண்டொரு விஷயங்களைப்பற்றிப் பேசலாமோ?

பாலகி:—அப்படியே பேசலாம். கொஞ்சம் காபி சாப்பிடலாமோ?

சாந்த:—வேண்டாம். இப்பொழுதுதான் சாப்பிட்டேன்.

பாலகி:—நீங்கள் சிங்கப்பூரைவிட்டுப் புறப்பட்டது எப்பொழுதோ?

சாந்த: ஐந்து நாட்களாகின்றன. இன்றைய தினம் காலையில் இச் சென்னை வந்தேன் ஹோட்டலில சாப்பிட்டுவிட்டு நேராக இங்கே வந்தேன். நாம் ஒன்றையும் ஒளிக்காமல் மனம்விட்டுத் தாராளமாகப்பேசுவோம். ஒருவரையொருவர் ஏமாற்றப்பார்ப்பது பிரயோஜனமற்றது. காரியம் மிகவும் முக்கியமானது. நான் ஏமார்ந்தவனென்று எண்ணிவிடவேண்டாம். எனக்கு உண்மை நன்றாய்த் தெரியும். ஆகையால் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும்.

பாலகி:—எதன் உண்மை உமக்குத் தெரியும்?

சாந்த:—எந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டிருந்தீரோ அதன் உண்மைதான். நீரும், உமது தோழன் அரங்கநாதனும் பலே பக்காப்பேர்வழிகள். ஆனால் நீர் எனக்குச் சரியானபதில் சொல்லியே தீரவேண்டும்.

பாலகி:— நீங்கள் சொல்லுவது விளங்கவில்லையே.

சாந்த:— விளங்கவா இல்லை? விளங்காதுதான். நீங்களிருவரும் தந்திரமாய் நடந்துகொண்டதினால் சிங்கப்பூர் போலீஸ் இது விஷயத்தில் ஒன்றுமே செய்யமாட்டாமல் போய்விட்டார்கள். நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்மையைத் தெரிந்துகொண்டேன். உம்மைக் காணவே இங்கு வந்தேன். நீர் ஸௌந்தர விலாஸத்தில் வசிப்பதாக எனக்குக் கடிதம் கிடைத்தது. உடனே புறப்பட்டு வந்தேன்.

பாலகி:— என்னைப் பார்க்கவா வந்தீர்?

சாந்த:— பார்க்கமட்டுமல்ல, நீர் செய்த காரியத்திற்குத் தக்க ஸமாதானம் சொல்லித் தீரவேண்டும். தெரிகிறதா?

பாலகி:— நீர் சொல்லும் விஷயம் என்னவென்பதே விளங்கவில்லை.

சாந்த:— அப்படியானால் நீர் ஓர் பெரிய அயோக்கியன்.

பாலகி:— என்ன? என்னை அவமானப்படுத்தவா இப்படிப் பேசுகிறாய்?

சாந்த:— நான் நடந்தவற்றைத்தானே சொல்லுகிறேன்.

பாலகி:— உனக்கு நான் ஒரு கெடுதியும் செய்யவில்லையே.

இதைக்கேட்ட சாந்தலிங்கம் நாற்காலியைவிட்டு எழுந்திருந்து பாலகிருஷ்ணன் முகத்தை உற்றுப்பார்த்து "நீர் தானே அரங்கநாதனின் தோழன் பத்மநாபன்?" என்று அதிக கோபத்தோடு கேட்டான்.

பாலகி:— ஆம், நான்தான் பத்மநாபன். (என்று சாந்தமாய்ச் சொன்னான்.)

சாந்த:— நீர் என் எதிரில் நின்றுகொண்டு உமக்கொன்றும் தெரியாதென்று சொல்ல என்ன தைரியம்? என் கோமளாம்பாளை அவளது தகப்பனாரிடமிருந்து அபகரித்துவந்ததையும் தெரியாதென்று சொல்லுவாய்போல் காண்கிறது. ஜாக்கிரதை.

இவ் வார்த்தையைக் கேட்ட பாலகிருஷ்ணன் ஸ்தம்பித்துப்போய்விட்டான். கோமளாம்பாளையாவது சாந்தலிங்கத்தையாவது இவன் எப்படியறிவான்? சிங்கப்பூர் போயிருந்தாலல்லவோ தெரிந்துகொண்டிருப்பான். இருந்த போதிலும் தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லும் பக்ஷத்தில் சாந்தலிங்கம் தன்மேல் சந்தேகங்கொள்வான் என்றும், அதனால் தனக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமோவென்றும், இவனை ஏன் உள்ளே வர அனுமதித்தோமென்றும் வருத்தப்பட்டு பதில் சொல்ல வழியில்லாமல் விழிக்கலானான்.

சாந்த:— ஏன் கள்ளவிழி விழிக்கிறாய்? அவள் இப்பொழுது இருக்குமிடத்தைக்கூட மறப்பாயோ? நீ எனக்குப் போட்டியாய்த் தோன்றி என் காதலியைக் கலைத்து அடித்துக்கொண்டுவந்த துரோகியல்லவா? (என்று கடுகடுப்பாய்க் கூறினான்.)

பாலகி:—ஏன் வீணாகக் கோபித்துக்கொள்ளவேண்டும்? சாந்தமாகவே பேசலாம். யார் காதிலாவது கேட்கப் போகிறது.

சாந்த:—ஓகோ! எங்கே உன் அயோக்யத்தனம் வெளியாய் விடுமோ என்கிற பயமோ? பயப்படவேண்டியது தானே.

பாலகி:—முதலில் நான் என்ன தப்பிதம் செய்தேனென்கிற விஷயத்தை விபரமாய்ச் சொல்லவேண்டும்.

சாந்த:—உன் குற்றம் உனக்கு நன்றாய்த் தெரியுமே. நானும் அதுவிஷயமாய் உனக்குக் கடிதம் எழுதினேன். நீயும் பதில் அனுப்பியிருக்கிறாய். இதோ அவைகள் என்வசத்திலிருக்கின்றன. (என்று சொல்லித் தன் உள்சொக்காய்ப் பையிலிருந்து ஒரு கட்டு கடிதங்களை எடுத்துக் காட்டி) இவைகள் நீ கோமளாம்பாளை சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்குக் கொண்டுவந்ததை ஊர்ஜிதப்படுத்தும். இவைகள் என்னிடமிருக்கையில்

அவளை உனக்குத் தெரியாதென்று சொல்லத் துணியமாட்டாய்.

பாலகி:—நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவாவது மறுதளிக்கவாவது தயாராக இல்லை.

சாந்த:—ஓகோ! அப்படியா? நீ பெரிய அயோக்கியன். கோமளாம்பாள் இருக்குமிடத்தைச் சொல்லும்படி உன்னைக் கட்டாயப்படுத்தவே இவ்வளவு கஷ்டப்பட்டு இங்கே வந்தேன்.

பாலகி:—அப்படியானால் அதுவிஷயம் எனக்கொன்றும் தெரியாதென்று உடனே சொல்லுகிறேன்.

சாந்த:—இது பொய். முழுப்பொய். ஒருவாரத்திற்குமுன் உனக்கு இதுவிஷயங்கள் தெரியுமென்றும் ஆனால் அதைச் சொல்லமுடியாதென்றும் எழுதியிருக்கிறாய். நமக்குள் நடந்திருக்கிற கடிதப்போக்குவரத்துக்களை மறந்துவிடாதே. கோமளாம்பாள் என்னுடையவள் என்பதையும் மறவாதே.

பாலகி:—அப்படியானால் நீ கோமளாம்பாளின் காதலனா?

சாந்த:—அயோக்கியா! நான் இவ்வளவு கஷ்டநஷ்டங்களையும் கவனிக்காமல் இங்கு வந்தது அவளுக்காகத்தான். அதையும் நீ அறிவாய். அது தெரிந்திருந்தும் நான் அவள் காதலனாவென்று கேட்கிறாய். அவளை எனக்குக் கல்யாணம் செய்துகொடுப்பதாய் அவள் தகப்பனார் எனக்கு வாக்களித்தாரே. நடுவில் நீ தோன்றி அவளுக்கு ஆசை வார்த்தைகள் சொல்லிக் கொண்டு போய்விட்டாயே. பாதகா! உனக்கு நல்ல உலகம் கிடைக்குமா?

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் பதில் சொல்லமுடியாமல் திகைத்தான். சாந்தலிங்கமோ தன்மேல் பழி சுமத்துகிறான். தான் பத்மநாபனல்லவென்று சொன்னாலும் ஆபத்தாய் முடியும். என்னசெய்வான் பாபம்! ஒன்றும் தோன்றாமல் மௌனமாய் நின்றான்.



சாந்த:—நீயும் உன் தோழன் அரங்கநாதனும் என்னை எவ்வளவு தந்திரமாய் ஏமாற்றினீர்கள்? தோழன் பணத்தைத் திருடினான். நீயோ என் உயிராகிய கோமளாம்பாளைக் கொண்டுபோய்விட்டாய். முன்னால் நடந்தவைகளைக் கொஞ்சம் யோஜித்துப்பார். நான் அவளை சமுத்திரக்கரையில் சந்திப்பதாய் ஏற்பாடு செய்திருந்தேன். நீ அதை எப்படியோ தெரிந்துகொண்டு நான் வருவதற்குமுன்னால் அங்கேவந்து அவளை உன் வசப்படுத்திக்கொண்டு எங்கோ கொண்டுபோய்விட்டாய். நீ இதை ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியாது. இது சமாசாரத்தைப் போலீசில்தெரியப்படுத்த,அவர்களும் தங்களாலானவரையிலும் உங்களைப் பிடிக்க முயன்றார்கள். அது அவர்களால் முடியாமற்போயிற்று. ஆனால் நான் அதை விட்டுவிடாமல் மிகுந்த கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக இங்கு உன்னைக் கண்டுபிடித்தேன். என் கோமளாம்பாள் இருக்குமிடத்தைச் சொன்னாலொழிய உன்னை லேசில் விடமாட்டேன். இது நிச்சயம்.

பாலகி:—அப்படியா? அரங்கநாதனை சிங்கப்பூர் போலீஸ்காரர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்களா?

சாந்த:—உன்னையுங்கூடத்தான் தேடுகிறார்கள். சிங்கப்பூரில் இரங்கநாதன் முதல்முதலாக என் நண்பனொருவனால் எனக்கு அறிமுகம் செய்யப்பட்டான். நானும் அவனை யோக்கியனென்றே நம்பியிருந்தேன். கொஞ்ச நாட்களில் என் கைப்பெட்டியிலிருந்த முப்பதினாயிரம் ரூபாய்களையும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். எனக்கு அப் பணம்போனதினால் ஒரு நஷ்டமுமில்லை. எனக்கு ஏராளமான பூஸ்திதிகளும் பாங்கியில் இரண்டுலக்ஷ ரூபாயும் இருக்கின்றன. ஆனால் என் உயிருக்குயிரான கோமளாம்பாளைக் காட்டிவிடு. அவள் மேல் யாதொரு குற்றமும் கிடையாது. அவளோ சிறுபெண். உன் வார்த்தையை நம்பி மோசம் போய் விட்டாள்.

பாலகி:—ஆகையால் கோமளாம்பாள் என்னோடு சிங்கப்பூரைவிட்டு வந்துவிட்டதாகவா சொல்லுகிறாய்?

சாந்த:—நீ அவளை அழைத்துக்கொண்டு ரங்கூன் வந்துவிட்டதாக நீயே உன் கைப்பட கடிதம் எழுதியிருக்கிறாயே. நானும் இரண்டு மாதம் ரங்கூனில் அவளைத் தேடாத இடமே கிடையாது. அவள் இருப்பிடம் உனக்குத் தெரியும். நீ அதைச் சொல்லாவிட்டால் போலீஸ் கமிஷனருக்கு, சிங்கப்பூர் போலீஸ்காரர் தேடிக்கொண்டிருக்கும் பத்மநாபன் இப்பொழுது சுந்தர விலாஸத்தில் இருக்கிறானென்று இந்த டெலிபோன் மூலமாய்ச் சொல்ல பின்வாங்கமாட்டேன்.

பாலகி:—எனக்குத் தெரிந்தால்தானே சொல்லலாம். இது விஷயம் எனக்குத் தெரியாதென்று முன்னமே சொல்லிவிட்டேன்.

சாந்த:—இது முழுப் பொய். நீ சொல்லமாட்டாயா?

பாலகி:—தெரிந்தால்தானே சொல்ல முடியும்.

சாந்த:—நீ பத்மநாபன்தானே? (என்று அடக்கமுடியாத கோபத்துடன் கண்கள் சிவக்க உறக்கக் கூவினான்.)

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் தன் தலையைத் தூக்கிப் பார்க்க சாந்தலிங்கம் தன் கைத்துப்பாக்கியைத் தன் மேல் குறிவைத்துச் சுடத் தயாராயிருப்பதைக்கண்டு நடுங்கிப்போய் பதில் சொல்ல நாவெழாமல் தன் நாற்காலியில் சாய்ந்தான்.

## அத்தியாயம் 13.

சாந்த:—நீ பத்மநாபனா இல்லையா? சொல் சீக்கிரம். இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுத்தள்ளிவிடுவேன். (என்று கண்டிப்பாய்ச் சொல்லியும் பாலகிருஷ்ணன் பதில் சொல்லாததைக் கண்டு) நீ பத்மநாபனல்லவென்று தோன்றுகிறது. என்ன பதிலைக் காணோம்? (என்றான்.)

பாலகி:—நான் அப்படிச் சொல்லவில்லை.



சாந்த:—நீ அப்படிச் சொல்ல முடியாதுதான். உன்னுடைய படத்தைப் பார்த்திருக்கிறேன். நான் இவ்வறைக்குள் வந்ததும் உன்னை அடையாளம் கண்டுபிடித்துவிட்டேன். நீ பத்மநாபன் என்பது நிச்சயம்.

பாலகி:—நான் அப்படிச் சொல்லாமலிருக்க ஏன் மறுபடியும் கேட்கவேண்டும்?

சாந்த:—ஏனென்றால், நீ எனக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். கோமளாம்பாளும் இச் சென்னையில் எங்கோ இருக்கிறாள். அவள் இருப்பிடம் உனக்கு நன்றாய்த் தெரியும். நான் அவளை உடனே பார்க்கவேண்டும். ஆகையால் அவளிருப்பிடத்தைச் சொல்லாவிட்டால்— பத்திரம்.

பாலகி:—அவள் இருப்பிடம் எனக்குத் தெரியாது.

சாந்த:—இது பொய். சிலநாட்களுக்குமுன்தானே அவள் உன்னுடன் இச் சென்னைக்கு வந்தாள். அது எனக்கு நன்றாய்த் தெரியும்.

பாலகி:—அவள் என்னுடன் இங்கு வரவில்லை. இது சத்தியம்.

சாந்த:—அப்படியானால் அவளைத் தனியாய் ரங்கூனில் விட்டுவிட்டு வந்தாயோ? பாபி! அவள் ஜீவனத்துக்கு என்ன பண்ணுகிறாளோ? எங்கே தனியாய்த் தவிக்கின்றாளோ? அவளை அப்படி விட்டு வரவும் உன் மனம் துணிந்ததே. உன் மனம் கல்லோ?

பாலகி:—நீ சொல்வதுபோல் நான் நடக்கவில்லை. அவள் இருப்பிடமே எனக்குத் தெரியாது. வீணாக ஏன் என்னுடன் சண்டைபோடுகிறாய்?

சாந்த:—நீ எனக்கு இவ்விதக் கஷ்டநஷ்டங்களைச் செய்திருக்க, உன்னுடன் நான் சண்டைமட்டுமா போடுவேன்? உன்னை ஒரு பைத்தியம் பிடித்த நாயைச் சுட்டுத்தள்ளுவதுபோல் சுட்டும் தள்ளுவேன்.

பாலகி :—இவ் விஷயம் ஒன்றுமே எனக்குத் தெரியாதென்று பன்முறை சொல்லியும் ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்?

சாந்த:—யார் பிடிவாதம் பிடிக்கிறதென்பதை உன் மனச்சாக்ஷியே உனக்குச் சொல்லும். நான் அவளைக் கண்டிப்பாய்ப் பார்க்கவேண்டும். அவள் இருப்பிடத்தை மட்டும் சொல்லிவிடு. உன்னை மன்னித்துவிடுகிறேன்.

பாலகி :—போதும். இவ் விஷயத்தை இத்துடன் நிறுத்திக் கொள்வதே நம் இருவருக்கும் நன்மை. (என்று சொல்லி மேஜைமேலிருந்த மணியை அடிக்க அடுத்த நிமிஷம் சீனு உள்ளே வந்தான்.) சீனு! இவருக்கு வெளியே போக வழியைக் காட்டு. (என்று உத்திரவிட்டு அவ்வறையைவிட்டு வெளிச்செல்ல முயன்றான்.)

சாந்த :—(அவனைத் தடுத்து) உன்னை வெளியேபோகவிட மாட்டேன். உண்மையைச் சொன்னபிறகே நீ வெளியே போகவேண்டும். (என்று வழியை மறித்துக் கொண்டான்.)

பாலகி :—நான் சொல்லவேண்டியதைச் சொல்லியாய்விட்டது. மரியாதையாய் வெளியே போய்விடுவது நலம்.

சாந்த:—இன்றையதினம் நீ உண்மையைச் சொல்ல மறுக்கிறாய். நாளையதினம் உன்னைக் கட்டாயப்படுத்தப் போகிறேன். நீயும் அரங்கநாதனும் பக்காப்பேர்வழிகளென்று எனக்குத் தெரியும். உங்களுக்குத் தகுந்த பலே பக்காப்பேர்வழி நான் என்பதைத் தெரிந்துகொள். (என்று சொல்லி மிக்க கோபத்தோடு அவ்வறையைவிட்டு வெளிச்சென்றான்.)

அவன் கூறிய அவ் வார்த்தைகளைக்கேட்டு பாலகிருஷ்ணன் நடுங்கிவிட்டான். ஆனால் சாந்தலிங்கம் அரங்கநாதனின் சத்துருவென்பதைக் கண்டுகொண்டான். இது சற்றுமுன் தெரிந்திருந்தால் சாந்தலிங்கத்திடம் தன் விஷயங்களையும் சொல்லி அவனுடன் சேர்ந்துகொண்டு



பத்மநாபன் விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கலாமே என்று எண்ணினான். மேலும் அரங்கநாதனிடமிருந்து தப்பிக்கொண்டு அவனைக் காட்டிக்கொடுத்துவிடலாமே என்றும் எண்ணினான். ஆனால் காரியம் மிஞ்சிவிட்டபடியால் நல்ல சமயத்தை விட்டுவிட்டோமே என்று வருத்தப்பட்டான். இதற்குள் சீனு ஓர் பத்திரிகையைக் கொண்டுவந்து மேஜையின்மேல் வைத்தான். அதை எடுத்துப் படித்துப் பார்க்க ஒரு தலைப்பில் பின்வரும் சமாசாரங்கள் காணப்பட்டன.

" மாயமாய் மறைந்த பாலகிருஷ்ணன். "—

"ஒரு மேல் சொக்காய் அடையாற்றின் கரையோரமாகப் போலீஸ்காரரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் ஜேப்பிற்குள் சில கடிதங்கள் இருந்தன. அவைகள் பாலகிருஷ்ணனுக்கு அவன் சிநேகிதர்கள் எழுதிய கடிதங்கள். கடிதமெழுதியவர்களை விசாரிக்கையில், அது தாங்கள்தான் பாலகிருஷ்ணனுக்கு எழுதியவைகள் என்று சொன்னார்கள். ஆகையால் தன் வறுமையை உத்தேசித்தும் கௌரவத்தை உத்தேசித்தும் பாலகிருஷ்ணன் தற்கொலை செய்துகொண்டானென விளங்குகிறது. மேலும் ஆற்றில் ஜலம் வேகமாயோடிக் கடலில் விழுகிறபடியால் அவனது சவம் அகப்படாது என்று தோன்றுகிறது."

இதைப் பார்த்ததும் பாலகிருஷ்ணன் அதிக ஆச்சரியமடைந்தான். இதை ஜனங்கள் நம்புவார்களாகில் தனக்குப் பயமில்லையென்று எண்ணினான். ஆனால் தனது கடிதங்கள் அச் சொக்காயில் எப்படி வந்தனவென்பதை அறிய முடியவில்லை. இவ் விஷயங்களை ஆலோசிக்க, தன் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றி வாதிக்க, சகிக்கமுடியாத துக்கத்தோடு கூட்டில் அடைபட்ட புலியைப்போல் அவ்வறையில் உலாவிக்கொண்டிருக்கும்போது, அரங்கநாதன் உள்ளே வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு பாலகிருஷ்ணன்முன் நின்றான். அவன் திடீரென்று தன்முன் நிற்பதைக் கண்ட பாலகிருஷ்ணன் பிரமித்து நின்றுவிட்டான்.

அரங்க :—நீ வெளியே போகாமல் இருப்பதைக் காண மிகவும் சந்தோஷம்.

பாலகி :—அரங்கநாதா ! உன் ஒப்பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டது என் ஜன்மத்துக்கும் போதும்.

அரங்க :—ஏன் ? என்ன விசேஷம் ?

பாலகி :—நான் பத்மநாபனைப்போல் நடப்பதாக ஒப்புக்கொண்டபடியே நடந்துவருகிறேன். ஆனால் அப்பத்மநாபன் இப்படிப்பட்ட அயோக்கியன் என்பது எனக்கு அப்பொழுது தெரிந்திருந்தால் நான் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கவே மாட்டேன்.

அரங்க :—பத்மநாபனா அயோக்கியன் ? யார் அப்படிச் சொன்னது ? எனக்கொன்றும் விளங்கவில்லை. விபரமாய்ச் சொல்.

பாலகி :—இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இனி என்னால் இப்படியிருக்கமுடியாது. ஒப்பந்தத்தை ரத்து செய்யத் தீர்மானித்துவிட்டேன்.

அரங்க :—மர்மமா ? இதில் சில விஷயங்கள் உனக்குப் புரியாமலிருக்கலாம். அவைகளை இந்த சமயம் உனக்குச் சொல்லக்கூடாது. முடிவில் நீயே அவைகளைத் தெரிந்துகொள்வாய்.

பாலகி :—அவைகளை இப்பொழுதே தெரிந்துகொண்டாலொழிய என்னால் இனி ஒருநிமிஷம்கூட இங்கு இருக்கமுடியாது. இப்பொழுதே அவைகளைச் சொல்லித்தீரவேண்டும். முதலில் நான் ஏன் பத்மநாபனைப்போல் வசிக்கவேண்டும் ?

அரங்க :—உனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்துவரும் எங்களுக்குத்தான் தெரியும்.

பாலகி :—அதை இப்பொழுது சொல்லமாட்டாயோ ?

அரங்க :—அப்படியல்ல. இந்தசமயம் அதைச் சொல்லமுடியாததைப்பற்றி வருந்துகிறேன்.

பாலகி:—பத்மநாபன் இறந்தது உண்மையா என்பதை மட்டுமாவது சொல்.

அரங்க:—ஏன்?

பாலகி:—நான் பத்மநாபனென்று எண்ணி என்மேல் பெரிய குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

அரங்க:—அப்படிச் செய்தது யார்?

பாலகி:—சற்றுநேரத்திற்குமுன்தான், உனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும், சிங்கப்பூர் சாந்தலிங்கம் இங்கே வந்திருந்தான்.

இப் பெயரைக் கேட்டதும் அரங்கநாதன் இடியோசை கேட்ட நாகம்போல் ஒடுங்கி நடுங்கி "சாந்த—லிங்கமா?" என்று வாய்குழறக் கேட்டான்.

பாலகி:—என்னைப் பார்க்கவே இச் சென்னைக்கு வந்ததாகச் சொன்னான். என்மேல் அபாண்டமான குற்றம் சுமத்துகிறான். உன்னையும் அந்த அயோக்கியனை பத்மநாபனையும் தெரியுமென்றும் சொன்னான்.

அரங்க:—நீ என்ன குற்றம் செய்ததாகச் சொன்னான்?

பாலகிருஷ்ணன் தனது நன்மையின்பொருட்டு எப்படி நடந்துகொள்ளலாமென்று சற்றுநேரம் ஆலோசித்து "அரங்கநாதா! நீ என்னிடம் உண்மையைச் சொல்ல மறுக்கிறாய். அது மாதிரியாகவே இங்கு நடந்தவைகளை உன்னிடம் சொல்ல நானும் தயாராக இல்லை," என்றான்.

அரங்க:—ஓஹோ! அப்படியா? அவன் இச்சென்னைக்கு வந்தது எதிரா தேடுதல் செய்யவேண்டித்தான். இல்லாவிட்டால் அவன் இங்கு வரமாட்டான்.

பாலகி:—ஆகையால் நீ அவனை உன் விரோதியென்று ஒப்புக்கொள்ளுகிறாயா?

அரங்க:—ஆம், அவன் உன்னை பத்மநாபன் என்று நினைத்துக்கொண்டிருக்கும் வரையில் உனக்கும் விரோதிதான்.

பாலகி :—ஆகையால் அவனால் செய்யப்படும் தண்டனைக்கும் நான் உட்படவேண்டியதுதானே?

அரங்க :—ஆம். இருந்தபோதிலும் நீ அவனை எதிர்த்து நிற்கலாம். உன்பக்கம் ஜயமானாலும் ஆகலாம்.

பாலகி :—ஆகையால் அவன் இங்கு வந்ததின் காரணம் உனக்குத் தெரியும்போல் காண்கிறது.

அரங்க :—தெரியாது. அவன் என்ன சொன்னான் என்பதைச் சொன்னால் அதிலிருந்து அவன் வந்த காரணத்தை அறிந்துகொள்ளலாம்.

பாலகி :—அதை என்னால் சொல்ல முடியாது.

அரங்க :—ஏன்?

பாலகி :—சமீபகாலத்தில் சிங்கப்பூரில் வசித்த பத்மநாபனைப்பற்றிய உண்மையை நீ சொல்ல மறுப்பதுதான் காரணம்.

அரங்க :—பத்மநாபன் சிங்கப்பூரில் வசித்தது உனக்கு எப்படித் தெரியும்?

பாலகி :—சாந்தலிங்கம் சொன்னான். மேலும் நீ என்னிடம் ஒளித்துவைத்திருக்கும் விஷயங்களையும் சொன்னான்.

அரங்க :—அது என்னவென்பதை சீக்கிரம் சொல்.

பாலகி :—உன்னை ஒழித்துவிடவேண்டிய அத்தாக்ஷியோடும் வந்திருப்பதாய்ச் சொன்னான்.

அரங்க :—ஓகோ! நீயே அப்படி எண்ணிக்கொண்டாயோ?

பாலகி :—அப்படியொன்றும் நானாக எண்ணிக்கொள்ளவில்லை. அவன் தன் தீர்மானத்தை என்னிடம் சொன்னான்?

அரங்க :—அவன் என்ன செய்யப்போவதாய்ச் சொன்னான்.

பாலகி :—உனது நன்மைக்குப் பாதகம் செய்யப்போவதாய்ச் சொன்னான். பத்மநாபன் விஷயங்கள் எனக்குத் தெரிந்தாலொழிய அதை என்னால் எப்படிச் சொல்லமுடியும்? அது தெரிந்தால் உனது நன்மைக்குப் பாடுபடுவேன்.



அரங்க :—உனது நன்மைக்கென்று சொல்லிக்கொள்.

பாலகி :—என்னைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

அரங்க :—என்னைப்பற்றியவரையில் ஒன்றும் இருக்காது. எல்லாம் உன் விஷயமாய்த்தான் இருக்கும். அதற்குச் சந்தேகமில்லை.

பாலகி :—நீ என்னிடம் உண்மையைச் சொல்லாவிட்டால் உனக்கு வரப்போகும் கஷ்டத்தை நீயே வரவழைத்துக்கொண்டு கஷ்டப்படு. என்மேல் குற்றம் கூறப்போகிறாய்.

அரங்க :—நான் உன்னிடம் உண்மையாய் நடந்துகொள்ளவில்லையா? அது இன்று சாயங்காலப் பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். அதுவும் அதோ மேஜையின்மேல் இருக்கிறது. அதையும் நீ பார்த்திருப்பாய். அதில் 'மாயமாய் மறைந்துபோன பாலகிருஷ்ணன்' என்னும் தலைப்பின்கீழ் காணப்பட்டதையும் பார்த்திருப்பாய்.

பாலகி :—ஆம். பார்த்தேன்.

அரங்க :—போலீஸ்காரர் உன்னை இனி தேடாமல் இருக்கவே நான்தான் அப்படிச் செய்தேன். இதைக் கொஞ்சம் யோசித்துப்பார். உன் நன்மைக்கு நான் பாடுபடுவது தெரியும்.

அரங்கநாதன் நடத்தையைப்பற்றி காமாக்ஷியும் சாந்தலிங்கமும் சொன்னதிலிருந்து, அவன் பட்டணத்திலுள்ள அயோக்கியர்களில் முதன்மையானவனென்று பாலகிருஷ்ணன் நன்றாய்த் தெரிந்துகொண்டிருந்தான்.

பாலகி :—இது செய்ததற்கு மிக்க வந்தனம். அது நான் வெளியே பயமின்றி நடமாடுவதைத் தடுக்காததினால் நான் கிராமத்தில் வசித்தாலென்ன ?

அரங்க :—அதுமட்டும் முடியாத காரியம். பத்மநாபனுக்குக் கிராமவாசம் பிடிக்காது. மேலும் நீ இங்கேயே இருக்கவேண்டியது அவசியம். என்மேல் என் சாந்தலிங்கம் கோபமாயிருக்கிறான்?

பாலகி :—நீ கோமளாம்பாளுக்குச் செய்திருக்கும் துரோகத்துக்காகத்தான்.

அரங்க :—அவனுக்குக் கோமளாம்பாளைத் தெரியுமென்று சொன்னானா ?

பாலகி :—இது என்ன கேள்வி ? அவள் அவன் காதலி என்பது உனக்குத் தெரியாதோ ?

இதைக் கேட்ட அரங்கநாதன் இடியோசை கேட்ட நாகம்போல் அசைவற்று நின்று, சற்றுநேரம் கழித்துத் தன் நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்து, தனது ஆயுள் காலம் முடிந்தவன்போல் மிரள விழித்து, வாய் குழற "அவள் அவன் காதலியா? தெய்வமே! அப்படியானால்—" என்று சொல்லிக்கொண்டே அவ்வறையைவிட்டு வெகு வேகமாய் வெளியே ஓடினான்.

---

## அத்தியாயம் 14.

மறுநாள் மாலை சுமார் நான்குமணிக்கு ஆனந்த நிலயத்தின் தோட்டத்தில் தியாகராஜன் உலாவச்சென்றான். அவ்விடம் காமாக்ஷி உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டு, அவளிடம் சென்று "காமாக்ஷி! உன்னுடன் சில வார்த்தைகள் ரகசியமாய்ப் பேசவேண்டுமென்று இருந்தேன். சமயம் வாய்க்கவில்லை. இப்பொழுது தற்செயலாய் கிடைத்திருக்கிறது." என்று சொன்னான்.

தியாகராஜனைக் கண்டதும், காமாக்ஷி, கண்களில் நெருப்புப்பொறி பறக்க அதிக கோபத்தோடு அவனைப் பார்த்து, "உன்னுடன் பேச எனக்கு இஷ்டமில்லை. நான் போகவேண்டும். வழியை விடு." என்று கோபத்தோடும் அதிகாரத்தோடும் சொன்னாள்.

தியாக:—நீ பேசியே தீரவேண்டும். அன்றைய தினம் நீ என்ன சொன்னாய் என்பதை நினைத்துப்பார்.

காமாக்ஷி: நினைத்துப்பார்ப்பதென்ன? அதையே இப்பொழுதும் சொல்லுகிறேன். நீ இன்றுமுதல் எட்டு நாட்களில் இந்த ஆனந்த நிலயத்திலிருந்து போய் விடவேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் நான் என் தகப்பனாரிடம் உண்மையைச் சொல்லி நீ அவர் விரோதி என்பதைச் சொல்லிவிடுவேன்.

தியாக:—முன் சொன்னதையே இப்பொழுதும் சொல்லுகிறாயே.

காமாக்ஷி:—ஆம், அதைத்தான் சொல்லுகிறேன். என் தகப்பனாரிடம் சொல்லத்தான் போகிறேன். அவரைப் போல் நானும் குருடியல்ல.

தியாக:—உன் தகப்பனார் என்னைப் போகாமலிருக்கும்படி தடுத்தால்—

காமாக்ஷி:—அவர் மட்டுமல்ல. வேறு எவர் தடுத்தபோதிலும் நீ போய்த் தீரவேவேண்டும். இல்லாவிட்டால் உண்மையைச் சொல்லிவிடுவேன்.

தியாக:—அப்படியானால் அதனால் உனக்கு வரும் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டிவரும்.

காமாக்ஷி:—என்ன வந்தபோதிலும், அனுபவிக்கத் தயாராய் இருக்கிறேன். இம் மாளிகை தோன்றிய காலம் முதல் இதில் அநேகம் அயோக்கியர்களும் கொலைபாதகர்களும் தங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உன்னைக்காட்டிலும் பதின்மடங்கு நல்லவர்களென்றே சொல்லலாம்.

தியாக: இப்பொழுது உன் தகப்பனாருக்கு நான்தான் அந்தரங்கத் தோழன். என் பிரிவை அவர் சகிக்க மாட்டார்.

காமாக்ஷி:—உன் நடத்தை அவருக்குத் தெரியாது. தெய்வச்செயலாய் உன் உண்மையான குணத்தைக் கண்டுகொண்டேன்.

தியாக:—நல்லது. காமாக்ஷி! உனக்கு என்னைக் கண்டால் பிடிக்கிறதில்லை. அதைத்தவிர இது மாதிரி நீ சொல்லுவதற்குத் தகுந்த காரணம் சொல்லு.

காமாக்ஷி:—அதை உனக்கு சொல்லவேண்டியது அவசியமில்லை. என் தகப்பனார் குருடராகையால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவரால் முடியாதென்று நீ நினைத்துவிட்டாய். உன்னிடமிருந்து அவரைக் காப்பாற்றவேண்டிய சாதனங்கள் என்னிடம் இருக்கின்றன.

தியாக:—சரி. அப்படியே செய்துகொள். உன் சங்கதி என்ன? (என்று பரிகாசமாய்க் கேட்டான்.)

காமாக்ஷி:—அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

தியாக:—அதே மாதிரியாகத்தான் எனக்கும் கவலையில்லை. நான் என் காரியத்தைப்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

காமாக்ஷி:—உன் காரியத்தைப் பார்ப்பதாயிருந்தால் இம்மாளிகையின் எல்லைக்கு அப்புறமிருந்து நடத்திக்கொள்ளலாம். இன்றைக்கு எட்டாவது நாள் மறவாதே. ஒதுங்கி நில். நான் போகவேண்டும். வழி விடுகிறாயா என்ன?

தியாக:—கொஞ்சம் பொறு. நான் சொல்லப்போவதைக் கேட்டபிறகே நீ போகவேண்டும். முதலில் யாதொரு காரணமின்றி என்னை உன் தகப்பனாரின் விரோதி என்று சொல்லுகிறாய். இரண்டாவதாக என்னை வேலையைவிட்டுப் போகும்படி கட்டாயப்படுத்துகிறாய். அப்படிப் போகாமலிருந்தால் நீ உண்மையை



வெளியிடுவதாயும் பயமுறுத்துகிறாய். அதனால் உன் வாழ்நாட்கள் வீணாகிவிடுமென்பதை யோசித்துப்பார்.

காமாக்ஷி:—என்னைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். என் தகப்பனாரின் விரோதியை விலக்குவதுதான் மேலான காரியம்.

தியாக:—நானா விரோதி? எப்படி விரோதி என்பதை விளக்கிச் சொல்.

காமாக்ஷி:—தியாகராஜா! உன் வேஷம் என்னிடம் பலிக்காது. நீ உன் படிப்பின் பெருமையால் என் தகப்பனாரை வஞ்சித்துவிட்டாய். அவர் உன் குணத்தைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அது எனக்கு நன்றாய்த்தெரியும். அது தெரிந்தபிறகு என் தகப்பனாரைக் காப்பாற்ற என் கௌரவமட்டுமல்ல; என் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நீ இவ்விடத்தைவிட்டுப் போகத்தான் வேண்டும்.

தியாக:—நீ என்னிடம் என்ன கண்டுகொண்டாய்?

காமாக்ஷி:—அதை தக்க சமயத்தில் தகுந்த மனிதர்களை வைத்துக்கொண்டு சொல்லப்போகிறேன். நான் சிறு பெண்ணென்று நினைத்துவிட்டாயோ? உண்மையை சொல்ல பயப்படுவேனென்று எண்ணிவிட்டாயோ? என் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு பேசாமலிருந்துவிடுவேனென்று நினைக்கவேண்டாம். எது வந்தபோதிலும் என் தகப்பனாரைக் காப்பாற்றாமலிருக்கமாட்டேன். என் மனதிலுள்ளதைச் சொல்லிவிட்டேன். அதன்படியே நடந்துகொள்ளப் பின்வாங்கமாட்டேன். இதை நிச்சயமாய் நம்பலாம்.

தியாக:—நீ சொல்லுவதுபோலவே நான் ராஜீனமா செய்தாலும் பிரபு என்னை விடமாட்டார்.

காமாக்ஷி:—அக் கவலை உனக்கு வேண்டாம். முதலில் ராஜீனமா கொடு. பாக்கி வேலையை நான் செய்துகொள்ளுகிறேன்.

தியாக :—ஓகோ! அப்படியா? நீ சேபுவினிடம் இல்லாததும் பொல்லாததும் என்னைப்பற்றிச் சொல்லி என் மேல் வெறுப்புண்டாக்கவா பார்க்கிறாய்?

காமாக்ஷி :—நீ என் விரோதியாக இருந்தபோதிலும் நான் உனக்கு முன் எச்சரிக்கை செய்யவில்லையா? நீ என் விஷயத்தில் அப்படி நடந்துகொண்டாயா?

தியாக :—நான் உன்னை ஒருபொழுதும் எதிர்க்கவில்லையே.

காமாக்ஷி :—நீ நேரில் செய்ய பயந்துகொண்டு அரங்கநாதன் முதலியவர்களைக் கொண்டு செய்யவில்லையா?

தியாக :—ஒரு காரியத்தை முன்பின் யோஜிக்காமல் செய்வது ஆபத்தாய் முடியுமென்பதைத் தெரிந்துகொள். பத்மநாபன் விஷயத்தை நினைத்துப்பார். அதை உன் தகப்பனார் கேள்விப்பட்டால் என்ன சொல்லுவார்? மற்ற ஜனங்கள் கேட்டால் என்ன நினைப்பார்கள்?

காமாக்ஷி :—நான் உன் கையில் சிக்கியவளென்றே நினைத்துக்கொள். இது மாதிரியாய்ச் சொல்லி என் வாயை அடைத்துவிடலாமென்று நினைப்பது வீணே. என் தகப்பனார் உன் கையில் சிக்கிக்கொண்டு ஏமாந்துபோவதை நான் பார்த்துக்கொண்டிருக்கமாட்டேன். இது நிச்சயம். உண்மையை ஜனங்கள் அறிவார்களாகில் என் விஷயத்தில் உன்னைக்காட்டிலும் பெருந்தன்மையாகவே எண்ணுவார்கள்.

தியாக :—உன் தகப்பனார் என் கையில் சிக்கிக்கொள்வதாவது? ஒன்றும் தெரியவில்லையே.

காமாக்ஷி :—உனக்கா தெரியாது? நேற்றைய தினம் காலையில் உன் தோழன் அரங்கநாதனிடமிருந்து அதிக ரகஸ்யமாய் வந்த கடிதத்தை நினைத்துப்பார். நீ நாளை வியாழக்கிழமை காலை ஆறுமணிக்குள் இந்த மாளிகையைவிட்டுச் செல்லாவிட்டால் அக் கடிதத்தை என் தகப்பனாரிடம் கட்டாயம் வாசித்துக் காட்டப்போகிறேன்.

இதைக் கேட்ட தியாகராஜன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. கை கால்கள் நடுங்கின. மிறள மிறள விழித்துக் காமாக்ஷியைப் பார்த்து "என்ன? என் கடிதம் உன்னிடமிருக்கிறதா? அதை நீ திருடியே இருக்கவேண்டும். என்ன அயோக்கியத்தனமான காரியம்?" என்று வாய்குழறக் கேட்டான்.

காமாக்ஷி:— என்ன பிதற்றுகிறாய்? யாரிடம் பேசுகிறாய் என்பதை ஞாபகத்தில் வை. ஜாக்கிரதை. நீ சொன்னபடி நான் அதைத் திருடவில்லை.

தியாக:— என் பெட்டியிலிருந்த கடிதம் உன்னிடம் இருக்கையில் ஏன் நான் அப்படிச் சொல்லக்கூடாது. நான் அதை உன்னிடம் கொடுக்கவில்லை. இப்பொழுது அது உன்னிடந்தானே இருக்கிறது?

காமாக்ஷி:— நான் முட்டாளல்ல அதை வைத்திருக்க. அதை நம்பிக்கையுள்ள ஒருவரிடம் பத்திரமாய் வைத்திருக்கிறேன். அதைப்பற்றி இனி உன் காரியம் பலிக்காது.

இதைக் கேட்டதும் தியாகராஜன் இன்னும் நடுங்க ஆரம்பித்தான். தனது உண்மை வெளியாகிவிடுமென்றே நினைத்துவிட்டான். காமாக்ஷியின் குணம் அவனுக்கு நன்றாய்த் தெரியும். தன் தகப்பனாரைக் காப்பாற்றத் தன் உயிரையும் லக்ஷியம் செய்யமாட்டாளென்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டான். தனது சூழ்ச்சிகள் முழுவதும் அக் கடிதத்தில் எழுதியிருந்ததால், தாங்கள் வெகுநாளாய்ச் செய்துவந்த சூழ்ச்சிகள் அக் கடிதத்தால் வெளியாகிவிடுமேயெனப் பயந்து, மறுபடியும் தன்னைச் சமாளித்துக்கொண்டு "நீ திருடவும் ஆரம்பித்துவிட்டாயா?" என்று கோபத்தோடு கேட்டான்.

காமாக்ஷி: என் தபால்பெட்டியிலிருந்து நீ கடிதங்களைத் திருடுவதுபோல் எண்ணிக்கொண்டுவிட்டாய். அது தற்செயலாய் அகப்பட்டது.

தியாக:— யார்கையிலகப்பட்டது?

காமாக்ஷி:—அதை வாசித்துப்பார்த்து உண்மையைத் தெரிந்துகொண்ட ஒருவர்கையிலகப்பட்டது.

தியாகராஜன், அம் மாளிகையில் காமாக்ஷியின் தோழியைத் தவிர மற்றவர்கள் தனக்கு வேண்டியவர்களாகையால், அக் கடிதம் காமாக்ஷியிடமே இருக்கவேண்டுமென்று நிச்சயித்து "அதை உன் தகப்பனாருக்குக் காட்டத்தான் போகிறாயோ?" என்று கேட்டான்.

காமாக்ஷி:—ஆம். அதுவும் நாளை வியாழக்கிழமை காலை ஆறு மணிக்குமேல்தான். என் குணம்தான் உனக்குத் தெரியுமே.

தியாக:—ஆகையால் இதைவைத்துக்கொண்டு என்னை மாளிகையிலிருந்து ஒழித்துவிடவா பார்க்கிறாய்?

காமாக்ஷி:—என் தகப்பனாரின் விரோதியை அப்புறப்படுத்தத் தீர்மானித்துவிட்டேன். நான் அவருடைய ஒரேபெண் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். நான் உனக்கு எட்டு நாட்கள் தவணை கொடுத்திருக்கிறேன். ஏதாவது சொல்லி விலகிக்கொள். நீ என்னிடம் இரக்கமில்லாமல் நடந்துகொண்டபோதிலும் நான் அவ்விதம் நடந்துகொள்ளவில்லை. உன் குணமும், உன் நடத்தையும், உன் சூழ்ச்சிகளும் வெளியாவதற்குள் ஓடிவிடு. (என்று சொல்லிவிட்டு மாளிகைக்குள் அதிவேகமாய்ச் சென்றாள்.)

தியாகராஜன் புத்திப்பிரமைகொண்டு காமாக்ஷி சென்ற திக்கையே பார்த்தவண்ணம் தனக்குள் "காமாக்ஷீ! நீ சொன்னபடியே நடப்பாய் என்பதை நன்றாய் அறிவேன். இத் தியாகராஜனை லேசான பேர்வழியென்று நினைத்துவிட்டாய், என்னைக் கண்டால் இவ்வுலகமே நடுங்குமே. பூனைக்குட்டிபோன்ற நீயா என்னை எதிர்ப்பது? நல்லது யார் பக்கம் ஜயம் என்பதை கூடிய சீக்கிரம் காண்பாய்." என்று சொல்லிக்கொண்டே வேறுவழியாய் மாளிகைக்குள் சென்றான்.



இது நடந்த மூன்றாவதுநாட் காலையில் விஜயா ஓர் கடிதத்தைக் கொண்டுவந்து தன் எஜமானி காமாக்ஷியிடம் கொடுத்தாள். விஜயா தன் அந்தரங்கத் தோழியாகையாலும், அவள் தன்னிடம் மிக்க உண்மையும் விசுவாசமும் உள்ளவளாகையாலும் அவளது எதிரிலேயே அக் கடிதத்தை காமாக்ஷி பிரித்துப்பார்க்க தன் காதலன் திருவேங்கடம் தன்னை எப்பொழுதும் சந்திக்குமிடத்தில் அன்றிரவு பத்து மணிக்கு அவசியம் வரவேண்டுமென்றும் தவறக்கூடாதென்றும் எழுதியிருந்தது. அதன்படியே அன்றிரவு பத்து மணிக்கு மாளிகையில் எல்லோரும் தூங்கிய பிறகு காமாக்ஷி எப்பொழுதும்போல் மாளிகையின் பின்பக்க வழியாக தோட்டத்திற்குள் சென்று எப்பொழுதும் தனது காதலனைச் சந்திக்குமிடமாகிய தோப்பிற்குள் சென்று ஒரு மாமரத்தடியில் வந்துசேர்ந்தாள். அவ்விரவு மிகவும் இருட்டாக பயங்கரமாயிருந்தபோதிலும் காமாக்ஷி அடிக்கடி அங்கு இரவுநேரத்தில் வருவது வழக்கமானதால் கொஞ்சம்கூட பயப்படாமல் சற்று நேரம் உலாவிக்கொண்டிருந்தாள். உடனே மோட்டார் ஊதுகுழாய் சத்தம் கேட்க அது தனது காதலனின் மோட்டாராக இருக்கவேண்டுமென்றெண்ணி சாலையோரமாயுள்ள வேலியின் பக்கம் சென்று கவனித்தாள். வண்டியின் லாந்தர் வெளிச்சம் பளிச்சென்று தெரிந்து சாலையின் திருப்பத்தில் மறைந்துவிட்டது.

தன் காதலன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அதே ஞாபகமாயிருந்தபடியால், தனக்குப் பின்னால் மர நிழலில் ஒரு மனிதன் ஒளிந்துகொண்டு தன்னைக் கவனித்துக்கொண்டிருப்பதை அவள் கண்டுகொள்ளவில்லை. திடீரென்று அவள் எதிர்பாராதபடி ஒரு துணி அவள் தலையின்மேல் வீசப்பட்டு அவள் கூச்சலிடமுடியாமலும் பார்க்கமுடியாமலுமிருக்கும்படி அவள் வாயையும் கண்களையும் மூடிவிடும்படியாக அத் துணி முறுக்கப்பட்டது. அவள் மூச்சுவிடமுடியாமல் திணறினாள். ஆனால் அத் துணியில் குளோரோபாரம் தெளித்திருந்ததினால் அடுத்த நிமிஷம்

தன் பிரக்ஞையை இழந்தாள். ஆனால் அவள் இமிறிய பொழுது இரண்டு முரடர்கள் அவள்மேல் பாய்ந்து அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டதுமட்டும் அறிவாள். அவர்களிடம் பூனையின் வாயிலகப்பட்ட கிளிளையைப்போலாய்விட்டாள். காமாக்ஷியின் சத்துருக்கள் ஜயமடைந்துவிட்டார்கள்.

## அத்தியாயம் 15.

அத் துணியை வீசியவன், அவ்விரு முரடர்களும் காமாக்ஷியைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவர்களிடம் "காரியம் ஒழுங்காகவே நடந்துவிட்டது. சீக்கிரம் இவளை வண்டிக்குத் தூக்கிக்கொண்டு செல்லுங்கள்." என்று ரகசியமாய்ச் சொன்னான். இவைகளைப் பார்த்துக்கொண்டேவந்த மூன்றாவது மனிதன் இவர்களிடம் ஓடிவந்தான். முதலில் வந்த தியாகராஜன் பின்னால் ஆள் வரும் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்க்க ஓடி வருபவன் திருவேங்கடமென்று தெரிந்துகொண்டு நிழலில் கொஞ்சம் ஒதுங்கி நின்றான். ஆனால் திருவேங்கடம் பெண்ணைத் தூக்கும் இருவர்களை நோக்கியே ஓடினான் ஆதலால் அடுத்த நிமிஷம் தியாகராஜன் தன் கையில் வைத்திருந்த கனத்த தடியால் திருவேங்கடத்தின் தலையில் ஓங்கி ஒரு அடி கொடுத்தான். அடிவிழுந்ததும் திருவேங்கடம் வேரற்ற மரம்போல் தரையின்மேல் தடாலென்று விழுந்தான். மறுபடியும் அடிக்கத் தடியை ஓங்கிய தியாகராஜனைப் பார்த்த அவ்விருவரும் "ஒரு அடியே போதும். இனி அடிக்கவேண்டாம். இந்த இருட்டில் உம்மைக் கண்டுகொண்டிருக்க மாட்டான். இந்த அடியிலிருந்து பிழைப்பதே சந்தேகம். அப்பா! என்ன அடி?" என்று சொல்லித் தியாகராஜன் கையிலுள்ள தடியைப் பிடித்துக்கொண்டார்கள்.

**தியாக:**—இவன் என்னை ஒருதடவைகூட பார்த்ததே கிடையாது. இருந்தபோதிலும் இவன் வாயை மூடிவிடுவதே நலம். இனி நம்முடையவளாகிய இவளைக் காதலிக்



காமலிருக்க இதுவே போதுமானது. நாழிகையாகிவிட்டது. ஒருக்கால் இவளைக் காணாமல் மாளிகையில் குழப்பமுண்டாகலாம். உங்கள் வேலையை நடத்திவிடுங்கள். நான் மாடியிலிருந்துகொண்டு அக் குருட்டுக் கிழத்தைப் பார்த்துக்கொள்ளுகிறேன். எனக்கு சமாசாரம் தெரிவிக்கவேண்டுமானால் கடிதத்தை நீல உறையில் போட்டு அனுப்புங்கள். அதைப் பார்த்தால் உங்களிடமிருந்து வந்ததாகத் தெரிந்து கொள்வேன்.

**ஆள்:**—அப்படியே செய்கிறோம்.

**தியாக:**—இவள் என்னை மாளிகையைவிட்டுப் போகும்படி கட்டாயப்படுத்தினாள், இவள் இம்மாளிகைக்குத் திரும்பிவாராமலே போகிறாள். என்னையும் சாமான்ய மனிதனாகவே நினைத்துவிட்டாள்.

**ஆள்:**—கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள். இது மிகவும் அபாயகரமான வேலை. யாராவது கேட்கப்போகிறார்கள். இது வெளியாகும்பக்ஷத்தில் நமக்கெல்லாம் தூக்குமரமே.

**தியாக:**—வெளியாகுவதா? அதோ கிடக்கும் அப் பயலை ஒழித்துவிட்டால்தான் அப்படி வராது. நீங்கள் முடித்துவிடுகிறீர்களா அல்லது நானே முடித்துவிடட்டுமா?

**ஆள்:**—அப்படியொன்றும் செய்துவிடாதீர்கள். இந்த இருட்டில் உம்மை அடையாளம் கண்டுகொள்ளமுடியாது. அப்படியே இருந்தாலும், உமக்கொன்றும் தெரியாதென்று நிரூபிக்கவேண்டிய ஏற்பாடுகளை முன்னமே செய்திருக்கிறீர்களே.

**தியாக:**—ஆம். இது விஷயத்தில் நீங்கள் பயப்படவேண்டாம்.

**முதல் ஆள்:**—இவளை ... ஒத்தாசை செய்யு... நாங்கள் சைதாப்பே...

போகவேண்டும். நாங்களப்பொழுது இக் காமாக்ஷி இல்லாமல்தானே போகவேண்டும்?

**தியாக:**—போகும் வழியில் ஓர் பாழுந் துறவு இருப்பதாயும், அது நம் காரியத்திற்கு அநுகூலமென்றும், இதை மறைத்துவிட சரியான இடமென்றும் சொன்னையே.

**இரண்டாவது ஆள்:**—அதை இன்று காலையில் பார்த்துவைத்திருக்கிறோம். அது சாலைக்கு ஒதுப்புரமானதாகையால் ஜனங்கள் அங்கே போவதில்லை. ஆகையால் அதுதான் நம்முடைய காரியத்திற்கு ஏற்றவிடமென்று நிர்மானித்திருக்கிறோம்.

**தியாக:**—சரி; காரியத்தை ஜாக்கிரதையாய் முடித்துவிட்டு எனக்கு சமாசாரம் சொல்லியனுப்புங்கள்.

**முதல் ஆள்:**—எங்களுக்கு அடிக்கடி எச்சரிக்கை செய்யவேண்டியதில்லை.

**தியாக:**—இருந்தபோதிலும் நீங்கள் முன் ஒரு சமயம் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்தபடியால் அவு வசியமாய் மாட்டிக்கொண்டீர்களே. ஞாபகம் இல்லையா?

**இர. ஆள்:**—இந்தத் தடவை அப்படி நடக்கமாட்டோம். நாழிகையாகிவிட்டது. எங்கள் காரியம் முடியவேண்டும்.

உடனே அவன் தான் கொண்டுவந்திருந்த இருட்டு லாந்தலைத் திருவேங்கடத்தின் முகத்தில் காட்டினன். திருவேங்கடம் தன் தலையிலுள்ள காயத்திலிருந்து இரத்தம் பெருக பிணம்போல் அசைவற்றுக்கிடந்தான். இதைக் கண்ட தியாகராஜன் "இவன் பிழைக்கமாட்டான்போல் தோன்றுகிறது. அப்படிப் பிழைத்தாலும் தனது ஞாபகத்தை [illegible] குணமாக ஒரு மாதம் செல்லும். அதற்குள் நம் காரியங்களை [illegible] கொண்டு போய்விடலாம்." என்று சொன்னன்.



**இர. ஆள்:**—சரி; அரங்கநாதருக்கு ஏதாவது சமாசாரம் உண்டோ?

**தியாக:**—உண்டு. பாலகிருஷ்ணன் விஷயத்தில் அவனிஷ்டப்படி செய்துகொள்ளலாமென்றும், பாலகிருஷ்ணன் திருவேங்கடத்தினிடத்தில் ரகசியங்கள் ஏதாவது சொல்லியிருக்கலாமென்றும், ஆகையால் அவனை உடனே ஒழித்துவிடவேண்டுமென்றும் சொல். அப்பா! என்ன நாற்றம்?

**முதல் ஆள்:**—குளோரோபாரம்தான் நாறுகிறது. அதில்லாவிட்டால் நமது காரியம் சந்தடியில்லாமல் எப்படி முடியும்? நாழிகையாகிவிட்டது.

உடனே அம்மூவரும் காமாக்ஷியை தூக்கி சமீபத்தில் சாலையில் தயாராய்வைத்திருந்த மோட்டாரில்வைத்து வண்டியை வேகமாய் விட்டுக்கொண்டு சென்றார்கள். தியாகராஜன் மாளிகைக்குள் சென்றான். திருவேங்கடம் அத்தோப்பில் நினைவற்றுக்கிடந்தான்.

அதே சமயம் நடந்த விஷயங்களைக் கவனித்துக்கொண்டு மறைவில் ஒளிந்துகொண்டிருந்த ஐந்தாவதுருவம் வெளியே வந்து திருவேங்கடத்தைக் குனிந்து தனது இருட்டு லாந்தலால் உற்றுப்பார்த்துவிட்டு வேகமாய் தோப்பை விட்டு வெளியே சென்று மறைந்துவிட்டது.

மறுநாள் காலை சுமார் ஒன்பது மணிக்குக் கல்யாணசுந்தரம் பிரபு தியாகராஜனோடு தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். தியாகராஜன் அன்றைய தினசரிப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தான்.

அந்த சமயத்தில் அம்மாளிகையின் காரியஸ்தன் பயங்கரமான முகத்தோடு [illegible] அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து "[illegible]! இன்று காலை நம் மாளிகையைச் சேர்ந்த தோப்பில் [illegible] தலையில் படுகாயப்படுத்தப்பட்டு தன் நினைவிழந்து [illegible] இரத்த வெள்ளத்தில் கிடந்ததை நமது தோட்டக்காரன் கண்டு

அவனை இம் மாளிகைக்குக் கொண்டுவந்திருக்கிறேன்.'' என்று பயத்துடன் சொன்னான்.

பிரபு:—யார்? அவன் யார்?

காரியஸ்தன்:—யாரோ தெரியவில்லை. அவனுக்கு ஸ்மரணை கிடையாது. அவனை ஓர் அறையில் படுக்கவைத்து டாக்டருக்கு சொல்லியனுப்பியிருக்கிறேன்.

பிரபு:—மிகவும் சந்தோஷம். அவன் எவ்விதமாய்க் காணப்படுகிறான்? நல்ல அந்தஸ்தில் இருப்பவனோ?

காரிய:—ஒன்றும் தெரியவில்லை. அவன் சாதாரண உடையே உடுத்திக்கொண்டிருக்கிறான். சுமார் 23 வயதிருக்கலாம். நல்ல ரூபவான். பலிஷ்டன். தலையில் பலத்த காயம். இரத்தம் அதிகம் வழிந்திருக்கிறது.

இதைக் கேட்ட தியாகராஜன் தன் மனதிலுள்ள கோபத்தையும் பயத்தையும் தன் முகக்குறியால் காரியஸ்தன் தெரிந்துகொள்ளாவண்ணம் மறுபக்கம் திரும்பிக்கொண்டு எதையோ கவனிப்பவன்போல் பாசாங்குசெய்து கொண்டிருந்தான்.

பிரபு:—அவனுக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்திருக்கிறாயா?

காரிய:—நமது தோட்டக்காரி மருதாயி அவனுக்கு வேண்டியவைகளைச் செய்துகொண்டு அவனிடமே இருக்கிறாள். டாக்டரை அழைத்துவர நம்முடைய மோட்டாரை அனுப்பியிருக்கிறேன். அவரும் சீக்கிரம் வந்துவிடுவார்.

பிரபு:—என்ன ஆச்சரியம்! என் தோப்பில் இதுமாதிரியான அனியாயம் நடந்ததே கிடையாது. தியாகராஜா! எல்லாவற்றையும் கேட்டாயா?

தியாக:—[illegible] "இவன் [illegible] பக்ஷிபிடிக்க வந்து [illegible] மரத்திலிருந்து [illegible] விழுந்திருக்கலாம். [illegible] அவனை இங்கு கொண்டுவரவேண்டும்? தோட்டக்காரன் வீட்டிலேயே வைத்திருக்கலாமே.

188792
சென்னை-600